# TPV/SHEV விசா வைத்திருப்பவர்களுக்கும், விண்ணப்பதாரிகளுக்கும் உள்ள நிரந்தர விசா வழிப்பதைகள்

ASRC
Asylum Seeker Resource Centre
Human Rights Law Program

## அரசாங்கம் செய்துள்ள அறிவிப்பு என்ன?

“Temporary Protection Visas மற்றும் Safe Haven Enterprise Visas ஆகிய விசாக்களை ஒழித்து, தகுதி பெறும் அகதிகளை நிரந்தர விசாவிற்கு மாற்றும் ஏற்பாடுகளை”ச் செய்வதற்கான உறுதிமொழியுடன் ‘லேபர் கட்சி’ தேர்தலைச் சந்தித்தது.

Temporary Protection visa (**TPV**) (உபபிரிவு 785), மற்றும் Safe Haven Enterprise visa (**SHEV**) (உபபிரிவு 790) ஆகிய விசாக்களை வைத்திருப்பவர்கள் நிரந்தரமான Resolution of Status (**RoS**) (‘தகுநிலைத் தீர்மானிப்பு விசா’) (உபபிரிவு 851) விசா ஒன்றிற்காக **விண்ணப்பிக்கவும்**, TPV/SHEV விசாக்களுக்கான விண்ணப்பங்களை RoS (‘தகுநிலைத் தீர்மானிப்பு’) விசாக்களுக்கான **விண்ணப்பங்களாக** மாற்றுவதற்குமான திட்டம் ஒன்றை அரசாங்கம் இப்போது அறிவித்துள்ளது.

‘துரித செயலாக்க முறைமை’ (Fast track system)-யின் காரணமாகத் தோல்வியுற்ற ஆயிரக் கணக்கானவர்களுக்கு தெளிவான, செயல்திறம் வாய்ந்த வழிப்பாதை எதுவும் இல்லாமல் இருக்கிறது. இதைப் பற்றிய தெளிவு-விளக்கம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள நாங்கள் அவசரமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம், அத்துடன் அனைவருக்கும் நிரந்தரத் தன்மையை அளிப்பதற்கான வழிப்பாதை ஒன்று வேண்டுமென நாங்கள் தொடர்ந்து வெளிப்படையாய்ப் பரிந்துரைத்துவருகிறோம்.

## இதனுடைய அர்த்தம் எனக்கு என்னவாக இருக்கும்?

TPV/SHEV விசாக்களை வைத்திருப்பவர்கள் மற்றும் TPV/SHEV விசாக்களுக்காக விண்ணப்பிப்பவர்களைத் ‘தகுநிலைத் தீர்மானிப்பு விசா’(RoS)க்களுக்காக மதிப்பீடு செய்வதற்கான வழிப்பாதைகளை அளிப்போம் என்ற அறிவிப்பினை அரசாங்கம் செய்துள்ளது. RoS விசாக்கள் என்பன இந்த விசாக்களை வைத்த்திருப்பவர்களை ஆஸ்திரேலியாவில் வசிக்கவும், வேலை செய்யவும், படிக்கவும், மற்றும் Medicare மற்றும் Centrelink போன்ற அரசாங்க சேவைகளை அணுகவும், தகுதி பெறும் குடும்ப அங்கத்தவர்களை நிரந்தர வதிவிடத்திற்காகப் பொறுப்பேற்று ‘ஸ்பான்சர்’ செய்து அழைக்கவும் அனுமதிக்கும் நிரந்தர விசாக்கள் ஆகும்.

கடைசிப் புதுப்பிப்பு: 15 ஃபிப்ரவரி, காலை 9:30 மணி

‘மனித உரிமைகள் சட்ட உதவித் திட்டம்’ (Human Rights Law Program) என்பது ASRC-யினால் அளிக்கப்படும் ஒரு சேவையாகும். ABN (ஆஸ்திரேலிய வர்த்தக இலக்கம்) 64 114 965 815 இன்கார்ப்பொரேஷன் இலக்கம்: A0042918

அரசாங்கத்தின் இந்த அறிப்பு பின்வருவோரைப் **பாதிக்காது**:

- புகலிடம் நாடிக்கொண்டிருப்பவர்கள், அல்லது மருத்துவ சிகிச்சைக்காக நவுரு அல்லது பி.என்.ஜி-யில் இருந்து ஆஸ்திரேலியாவிற்கு இடம் மாற்றப்பட்டவர்கள் (அதாவது, 'இடம்-மாறு நபர்கள்' (transitory persons') என்று 'திணைக்கள'த்தினால் சுட்டப்பட்டவர்கள்);
- விமானம் மூலம் ஆஸ்திரேலியாவிற்கு வந்து புகலிடம் நாடிக்கொண்டிருப்பவர்கள், அல்லது
- அவர்களுடைய நிரந்தர விசாக்கள் அல்லது மனிதாபிமான விசாக்கள் மறுக்கப்பட்டவர்கள் அல்லது இரத்து செய்யப்பட்டவர்கள்.

| **14 ஃபிப்ரவரி 2023 அன்றைய நிலவரப்படி உங்களுடைய தகுநிலை** | **இந்த அரசாங்க அறிவிப்பின் விளைவு** |
|---|---|
| TPV/SHEV ஒன்றிற்காக நான் விண்ணப்பித்தேன், மற்றும் அதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன். இதற்கு முன்பு TPV/SHEV ஒன்று எனக்கு எப்போதும் வழங்கப்பட்டதில்லை.<br>அல்லது<br>TPV/SHEV விசாவிற்கான என்னுடைய விண்ணப்பம் Immigration Assessment Authority (IAA)-இனால் 'திணைக்கள'த்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டது. | TPV/SHEV ஒன்றிற்கான தகுதித் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்வீர்களேயானால் (அதாவது, பாதுகாப்பு அளிக்கப்படவேண்டிய கடப்பாடு உள்ளவராக நீங்கள் அடையாளம் காணப்பட்டால்), நிரந்தர RoS ('தகுநிலைத் தீர்மானிப்பு') விசா ஒன்றிற்கான விண்ணப்பமாக அது தானாகவே மாற்றப்பட்டுவிடும்.<br><br>அதற்குப் பிறகு RoS ('தகுநிலைத் தீர்மானிப்பு') விசா ஒன்று வழங்கப்படுவதற்கான தகுதித் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்தால், நிரந்தர விசா ஒன்று உங்களுக்கு வழங்கப்படும்.<br><br>**இந்தக் கட்டத்தில் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எதுவும் இல்லை.** |
| என்னுடைய முதலாவது TPV/SHEV விசா முடிவடைவதற்கு முன்பாக என்னுடைய TPV/SHEV -விசாவைப் புதுப்பிப்பதற்காக நான் விண்ணப்பித்தேன், அத்துடன் என்னுடைய TPV/SHEV விசாவிற்கான தொடர் விண்ணப்பத்தின் மீதான முடிவிற்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன். | உங்களுடைய விண்ணப்பம் தானாகவே ஒரு RoS ('தகுநிலைத் தீர்மானிப்பு') விசாவிற்கான விண்ணப்பமாக மாற்றப்படும்.<br><br>RoS ('தகுநிலைத் தீர்மானிப்பு') விசா ஒன்று வழங்கப்படுவதற்கான தகுதித் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்தால், நிரந்தர விசா ஒன்று உங்களுக்கு வழங்கப்படும்.<br><br>**இந்தக் கட்டத்தில் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எதுவும் இல்லை.** |
| TPV/SHEV விசா ஒன்றை நான் வைத்திருக்கிறேன் அல்லது முடிவடைந்துவிட்ட TPV/SHEV விசா ஒன்றை நான் வைத்திருந்தேன் | அமைச்சர் அவர்கள் தடையை நீக்கும் பொழுது (அதாவது, விசா விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்ய உங்களை அழைக்கும் பொழுது), நிரந்தர RoS ('தகுநிலைத் தீர்மானிப்பு') விசா ஒன்றிற்காக உங்களால் விண்ணப்பிக்க இயலும்.<br><br>நிரந்தர RoS ('தகுநிலைத் தீர்மானிப்பு') விசா ஒன்றிற்காக உங்களால் எப்போது விண்ணப்பிக்க இயலும் என்பதும், விண்ணப்பத்தினைத் தாக்கல் செய்வதற்கான கால |

| | |
|---|---|
| | வரையறைளைப் பற்றிய விபரங்கள் எதுவும் உங்களுக்கு அறிவிக்கப்படும். பெரும்பான்மையானவர்களுக்கு மார்ச் 2023-இல் தடை நீக்கம் செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறி காண்பித்துள்ளார்.<br><br>உங்களுடைய TPV/SHEV விசா இன்னும் முடிவடையவில்லை என்றால், விசா விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக அமைச்சர் அவர்கள் உங்களை விரைவில் அழைக்கக்கூடும். உங்களுடைய விசா முடிவடையும் திகதிக்கு முன்பாக நீங்கள் இதைச் செய்யவேண்டும். மேலதிகத் தகவல்களுக்கு தயவு செய்து சட்டதரணி ஒருவருடன் பேசுங்கள். |
| TPV/SHEV விசாவிற்கான என்னுடைய விண்ணப்பம் ஒன்று 'திணைக்கள'த்தினால் மறுக்கப்பட்டது, மற்றும் Immigration Assessment Authority அல்லது நீதிமன்றத்தின் முடிவு ஒன்றிற்காக நான் காத்துக்கொண்டிருக்கிறேன் | **IAA மீளாய்வு அல்லது நீதிமன்ற செயல்பாட்டு முறையினை நீங்கள் தொடந்து மேற்கொண்டுவரவேண்டும்.**<br><br>IAA -வின் முன்பாக உங்களுடைய TPV/SHEV விசா மறுப்பு மீளாய்வில் நீங்கள் வெற்றி பெற்றால், அத்துடன் TPV/SHEV விசாவிற்கான பாதுகாப்புத் தகுதித் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்பவராகக் காணப்பட்டால், உங்களுடைய TPV/SHEV விசா**வைப்** புதுப்பிப்பிற்கான விண்ணப்பம் RoS ('தகுநிலைத் தீர்மானிப்பு') விசா ஒன்றிற்கு மாற்றப்படக்கூடும்.<br><br>IAA அல்லது நீதிமன்றத்தின் முன்பாக உங்களுடைய TPV/SHEV விசா மறுப்பு மீளாய்வில் நீங்கள் வெற்றி பெறாவிட்டால், RoS ('தகுநிலைத் தீர்மானிப்பு') விசா ஒன்றிற்காக செல்லுபடியாகும் விண்ணப்பம் ஒன்றை இடுவதற்கான தகுதி உங்களுக்கு இருக்காது.<br><br>உங்களுடைய பூர்வீக நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அல்லது உங்களுடைய சொந்த சூழ்நிலை மாற்றங்கள் ஆகியன உள்ளடங்க, புதிய, நம்பத்தகுந்த பாதுகாப்புக் கோரிக்கைகள் உங்களுக்கு இருக்குமேயானால், அமைச்சர் அவர்களுடைய தலையீட்டிற்கான வேண்டுகோள் ஒன்றை உங்களால் செய்ய இயலுமாக இருக்கலாம். புதிய பாதுகாப்பு விசா விண்ணப்பம் ஒன்றை இட உங்களை அனுமதிப்பது, அல்லது வேறு வகையான விசா ஒன்றை உங்களுக்கு வழங்குவது ஆகியன உள்ளடங்க, அமைச்சர் அவர்களுக்கு பரந்துபட்ட அதிகாரங்கள் உள்ளன. |
| என்னுடைய TPV/SHEV விசா விண்ணப்பம் ஒன்று மறுக்கப்பட்டது, மற்றும் எனக்காகத் தொடர்ந்து நடைபெற்றுவரும் செயல்பாடுகள் எதுவும் இல்லை.<br>அல்லது<br>என்னுடைய TPV/SHEV விசா இரத்து செய்யப்பட்டது | **RoS ('தகுநிலைத் தீர்மானிப்பு') விசா ஒன்றிற்காக செல்லுபடியாகும் விண்ணப்பம் ஒன்றை இடுவதற்கான தகுதி உங்களுக்கு இருக்காது.**<br><br>உங்களுடைய பூர்வீக நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அல்லது உங்களுடைய சொந்த சூழ்நிலை மாற்றங்கள் ஆகியன உள்ளடங்க, புதிய, நம்பத்தகுந்த பாதுகாப்புக் கோரிக்கைகள் உங்களுக்கு இருக்குமேயானால், அமைச்சர் அவர்களுடைய தலையீட்டிற்கான வேண்டுகோள் ஒன்றை உங்களால் செய்ய இயலுமாக இருக்கலாம். புதிய பாதுகாப்பு விசா விண்ணப்பம் ஒன்றை இட உங்களை அனுமதிப்பது, அல்லது வேறு வகையான விசா ஒன்றை உங்களுக்கு வழங்குவது ஆகியன உள்ளடங்க, அமைச்சர் அவர்களுக்கு பரந்துபட்ட அதிகாரங்கள் உள்ளன. |

| | |
|---|---|
| என்னுடைய விடயத்தில் தலையிடுமாறு அமைச்சர் அவர்களை நான் கேட்டிருக்கிறேன் | புதிய வேண்டுகோள் ஒன்றை அமைச்சர் அவர்களுக்கு விடுக்கவேண்டிய தேவை உங்களுக்கு இல்லை. தகுந்த தகவல்கள் அனைத்தையும் அமைச்சர் அவர்களுக்கு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும். |

## ‘தகுநிலைத் தீர்மானிப்பு விசா’ (RESOLUTION OF STATUS VISA) ஒன்றிற்கான தகுதித் தேவைகள் என்ன?

RoS (‘தகுநிலைத் தீர்மானிப்பு’) விசா விண்ணப்பம் என்பது பாதுகாப்பு விசாவிற்கான ஒரு விண்ணப்பத்தை விட குறைந்த விபரங்களைக் கொண்டதாகும். உங்களைப் பற்றியும், வேறெந்த விண்ணப்பதாரிகளைப் பற்றியுமான அடிப்படைத் தகவல்களை (பெயர், விலாசம், பிறந்த திகதி மற்றும் தொடர்பு விபரங்கள் போன்ற தகவல்கள்) இந்தப் படிவம் கேட்கும், அத்துடன் நன்னடத்தைத் தேவைப்பாடுகள் மற்றும் பயண வரலாறு ஆகியவற்றைப் பற்றிய சில கேள்விகளையும் இது கேட்கும். நீங்கள் கையொப்பம் இடவேண்டிய ‘ஆஸ்திரேலிய விழுமியங்கள் கூற்று’ (Australian Values Statement) ஒன்றையும் இந்தப் படிவம் உள்ளடக்கியிருக்கும்.

குறிப்பாக, குற்றச் செயல்கள் எதன் காரணமாகவும் நீங்கள் தண்டனை பெற்றிருந்தால், அல்லது உங்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தால், உங்களுடைய Resolution of Status விசா விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக சட்டதரணி ஒருவரது அறிவுரையைப் பெறுமாறு உங்களுக்கு சிபாரிசு செய்கிறோம்.

உடல்நலப் பரிசோதனை ஒன்றை மேற்கொள்ளுமாறும் நீங்கள் வேண்டப்படலாம். இது தேவைப்பட்டால், ‘உள்நாட்டு விவகாரத் திணைக்களம்’ அதை உங்களுக்கு அறியத்தரும்.

RoS (‘தகுநிலைத் தீர்மானிப்பு’) விசா விண்ணப்பத்தின் பகுதியாக உங்களுடைய பாதுகாப்புக் கோரிக்கைகளைப் பற்றிய தகவல்கள் எதையும் நீங்கள் கொடுக்க வேண்டியதில்லை. நேர்காணல் ஒன்றிற்கு நீங்கள் சமுகம் அளிக்க வேண்டியிருக்கும் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

RoS (‘தகுநிலைத் தீர்மானிப்பு’) விசா விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிக்குமாறு நீங்கள் வேண்டப்பட்டால், உங்களுடைய விண்ணப்பத்தை நீங்கள் சமர்ப்பிக்கும் பொழுது நீங்கள் கட்டாயமாக ஆஸ்திரேலியாவில் இருக்கவேண்டும் (‘இம்மி-அக்கவுண்ட்’ மூலமாக இணையவழியில் உங்களுடைய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டாலும்). உங்களுடைய விசா வழங்கப்படும் பொழுதும் நீங்கள் கட்டாயமாக ஆஸ்திரேலியாவில் இருக்கவேண்டும்.

**RoS (‘தகுநிலைத் தீர்மானிப்பு’) விசா ஒன்றிற்காக விண்ணப்பிப்பதற்குக் கட்டணம் எதுவும் இல்லை.**

## நான் தெரிந்துகொள்ள வேண்டிய வேறு விடயங்கள் என்ன?

RoS (‘தகுநிலைத் தீர்மானிப்பு’) விசா ஒன்று வழங்கப்படுவதற்கானத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் TPV/SHEV விசா வைத்திருக்கும் பெரும்பான்மையானவர்களுக்குப் பின் வரும் கால கட்டத்திற்குள்ளாக RoS (‘தகுநிலைத் தீர்மானிப்பு’) விசா ஒன்று வழங்கப்படும்.

- உங்களுடைய TPV/SHEV விசாவிற்கான விண்ணப்பமானது RoS (‘தகுநிலைத் தீர்மானிப்பு’) விசா விண்ணப்பமாக மாற்றப்படும் பொழுது 12 மாதங்களுக்குள்
- உங்களுடைய RoS (‘தகுநிலைத் தீர்மானிப்பு’) விசா விண்ணப்பத்தினை நீங்கள்

சமர்ப்பித்திருக்கும் பொழுது 12 மாதங்களுக்குள்.

உங்களுடைய RoS ('தகுநிலைத் தீர்மானிப்பு') விசா விண்ணப்பம் மறுக்கப்படும் பொழுது, 'நிர்வாக முறையீட்டு மன்று' (Administrative Appeals Tribunal)-இன் முன்பாக மீள்பரிசீலனை ஒன்று வேண்டுமென நீங்கள் வேணடலாம். இந்த மறுபரிசீலனை செயல்பாட்டைப் பற்றி நீங்கள் சட்ட ஆலோசனை நாடவேண்டியது முக்கியம்.

செயல்முறை அல்லது முடிவு ஒன்றிற்காக நீங்கள் காத்துக்கொண்டிருக்கும் பொழுது உங்களுடைய விசா நிபந்தனைகளை நீங்கள் தொடர்ந்து பின்பற்றிவருகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்துங்கள்.

## என்னுடய குடும்ப மீளிணைவு குறித்து என்ன ஆகும்?

நிரந்தரமான RoS ('தகுநிலைத் தீர்மானிப்பு') விசா ஒன்று உங்களுக்கு ஒரு முறை வழங்கப்பட்டதும், நிரந்தர ஆஸ்திரேலிய விசாக்களுக்காக வெளிநாடுகளிலுள்ள குடும்ப அங்கத்தவர்களை ஏற்பாதரவு கொடுத்து அழைக்க ('ஸ்பான்சர்' செய்ய) நீங்கள் தகுதி பெறக்கூடும். நிரந்தர விசா ஒன்று உங்களுக்கு அளிக்கப்படும் வரை குடும்ப அங்கத்தவர்களை உங்களால் ஏற்பாதரவு கொடுத்து அழைக்க ('ஸ்பான்சர்' செய்ய) இயலாது.

உங்களுடைய குடும்பத்திற்கு ஏற்பாதரவு கொடுத்து அழைக்க ('ஸ்பான்சர்' செய்ய) விண்ணப்பிப்பதற்கு முன்பு சட்ட அறிவுரையை நாடுமாறு உங்களுக்கு சிபாரிசு செய்கிறோம்.

## நான் எங்கிருந்து உதவி பெறலாம்?

நன்னெறிகளுக்குக் கட்டுப்பட்ட, நற்பெயர் பெற்ற மூலங்களிலிருந்து நீங்கள் அறிவுரை பெறவேண்டியது முக்கியம். அகதியர் சட்டத்தைப் பற்றிய சிறப்புத்துவ அறிவு கொண்ட சட்ட நிபுணர் ஒருவரது அறிவுரையை நாடுமாறு நாங்கள் சிபாரிசு செய்கிறோம். ஆஸ்திரேலியா முழுதும் உள்ள சிறப்புத்துவ சட்ட சேவை வழங்குநர்கள் மூலம் இரண்டு ஆண்டுகளில் TPV மற்றும் SHEV விசா வைத்திருப்பவர்களுக்கு விசா விண்ணப்பச் செயல்பாட்டின் ஊடாக ஒத்தாசை செய்ய 9.4 மில்லியன் டாலர்களை ஆல்பனீஸ் அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

ASRC ஒரு சுயாதீன அமைப்பு, மற்றும் மத்தியக் கூட்டரசின் நிதியுதவியை இது ஏற்பதில்லை. உங்களுடைய சட்டதரணி அணியினரிடமிருந்து எவ்வாறு உதவி பெறுவது என்பதை உள்ளடக்கிய சமூகத்தினருக்கு உதவுவதற்கான தகவல் ஏடுகள் asrc.org.au/get-help/legal-help/ எனும் வலைத்தலப் பக்கத்தில் உள்ளன.

நீங்கள் விக்டோரிய மாநிலத்தில் இருப்பவர் என்றால், இந்த மாற்றத்தில் **உதவ 'ரெஃப்யூஜீ லீகல்' (Refugee Legal)** எனும் அமைப்பிற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. இந்த அமைப்பினது **(03) 9413 0133** எனும் அவசர உதவியிணைப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணி வரை இயக்கத்தில் இருக்கும்.

RoS ('தகுநிலைத் தீர்மானிப்பு') விசா விண்ணப்பங்களில் ஒத்தாசை செய்வதற்காக நிதியுதவி அளிக்கப்படும் ஆஸ்திரேலியா முழுதும் உள்ள அமைப்புகள் பின் வருவனவாகும்:

| | | |
|---|---|---|
| Australian Capital Territory (ACT) | Legal Aid ACT | www.legalaidact.org.au |

| | | |
|---|---|---|
| New South Wales (NSW) | Refugee Advice and Casework Service (RACS)<br>RACS NSW -யின் பரிந்துரை அடிப்படையில், (Immigration Advice and Rights Centre (IARC)) | www.racs.org.au<br>www.iarc.gov.au |
| Northern Territory (NT) | Northern Territory Legal Aid Commission | www.legalaid.nt.gov.au |
| Queensland (QLD) | Refugee and Immigration Legal Service (RAILS) | www.rails.org.au |
| South Australia (SA) | Legal Services Commission of SA | www.lsc.sa.gov.au |
| Tasmania (TAS) | Tasmanian Refugee Legal Service | www.trls.org.au |
| Victoria (VIC) | Refugee Legal | www.refugeelegal.org.au<br>TPV/SHEV விசா மாற்றல் அவசர உதவியிணைப்பு (TPV/SHEV Conversion Hotline): 03 9413 0133 |
| Western Australia (WA) | Circle Green Community Legal | www.circlegreen.org.au |

## மேலதிகத் தகவல்களை நான் எங்கிருந்து பெறலாம்?

இந்தத் தகவல் ஏட்டினைப் புதுப்பிப்பது மற்றும் சமூகத்தினருக்கான தகவல் அமர்வுகளை அளிப்பது ஆகியன உள்ளடங்க, தகவல்கள் கிடைத்த பிறகு கூடிய விரைவில் ASRC அவற்றை அளிக்கும்.